தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

வேளாண்மை - 'மக்கள் நலம் காக்க மழை வளத்திற்கு முதலமைச்சரின் மரம் வளர்ப்புத் திட்டம்' - 75 ஊராட்சி ஒன்றியங்களில் 1997-98ஆம் ஆண்டில் செயல்படுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை (வேஉ1) துறை**

அரசாணை (நிலை) எண் 236
நாள் 2.6.1997

படிக்கப்பட்டவை

வேளாண்மை இயக்குநர் கடித எண் வேகா/75568/97, நாள் 29.4.97.

ஆணை

சட்ட மன்றப் பேரவையில் 15.3.97 அன்று நடந்த வேளாண்மைத்துறை மானியத்தின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது சாலை ஓரம் மரம் வளர்ப்புத் திட்டமான 'மக்கள் நலம் காக்க மழை வளத்திற்கு முதலமைச்சரின் மரம் வளர்ப்புத் திட்டத்தினை' ஜூன் மாதம் 3ம் நாளன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த மூன்று ஊராட்சி ஒன்றியங்களைத் தெரிவு செய்து துவங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சில மாவட்ட ஆட்சியர்கள் கருத்துரு அனுப்பி இருந்தனர். படிக்கப்பட்ட கடிதத்தில் வேளாண்மை இயக்குநர் ஒருங்கிணைந்த கருத்துருவை அனுப்பி உள்ளார்.

2. இச்செயற்குறப்பின்படி 75 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றும், புளிய மரக்கன்றுகள் மற்றும் வேம்பு போன்ற கன்றுகள் 25 கிலோ மீட்டர் சாலையோரங்களில் நடப்படலாம் னவும், இதற்காக ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ.9.80 இலட்சங்கள் வீதம் 75 ஊராட்சி ஒன்றியங்களுக்கு மொத்தம் ரூ.7.35 கோடி அரசு ஒபபளிப்பு தேவைப்படுகிறது எனவும், இத்திட்டம் நிறைவேற்றப்படுவதால், புளி, வேம்பு போன்றவை மூலம் பத்து ஆண்டுகளில் ரூ.65.35 கோடி வருவாய் பெற வாய்ப்பு உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மேற்கண்ட செயற்குறிப்பை அரசு கவனமாக பரிசீலித்து, கீழ்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது.

(அ) சாலை ஓர மரம் வளர்ப்புத் திட்டமான 'மக்கள் நலம் காக்க மழை வளத்திற்கு முதலமைச்சரின் மரம் வளர்ப்புத் திட்டம்' 3.6.97 முதல் செயல்படுத்தப்பட வேண்டும்.

(ஆ) இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் (நீலகிரி மாவட்டம் நீங்கலாக) சிறந்த 3 ஊராட்சி ஒன்றியங்களைத் தெரிவு செய்து, இவ்வாறு தெரிவு செய்யப்படும் மொத்தம் 75 ஊராட்சி உற்றியங்களுக்குத் தக்கவாறு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 25 கிலோ மீட்டர் தொலைவிற்கு மரம் நடும் வண்ணம் இத்திட்டம் அமைதல் வேண்டும்.

(இ) 8 மீட்டர் இடைவெளியில் இந்த மரக்கன்றுகள் நடப்பட வேண்டும். இதன்படி ஒரு கிலோ மீட்டருக்கு 250 மரக்கன்றுகள் சாலையின் இரு ஓரங்களிலும் நடப்பட வேண்டும். வேம்பு, புங்கன், புளி, இலுப்பை ஆகிய மரக்கன்றுகளும் மற்றும் தகுதிவாய்ந்த இடங்களில் பனை மரங்களும் நடப்பட்டு வளர்க்கப்பட வேண்டும்.

(ஈ) இத்திட்டம் கீழ்கண்டவர்கள் அடங்கிய அந்தந்த மாவட்ட குழுக்களால் செயல்படுத்தப்பட வேண்டும்.

1. மாவட்ட ஆட்சியர் - தலைவர்

2. மாவட்ட வேளாண் இணை இயக்குநர் - உறுப்பினர் - செயலர்

3. மாவட்ட வன அலுவலர் - உறுப்பினர்

4. திட்ட அலுவலர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) - உறுப்பினர்

வேளாண் இயக்குநர், சென்னை இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராகச் செயலாற்றுவார்.

4. இத்திட்டம் செயல்படும் முறை முன்னேற்றம் குறித்த விவர அறிக்கை ஒன்றினை வேளாண் இயக்குநர், தனி குறிப்புரையுடன் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் அரசுக்குத் தவறாது அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. 'மக்கள் நலம் காக்க மழை வளத்திற்கு முதல் அமைச்சர் மரம் வளர்ப்புத் திட்டத்தினை' தெரிவு செய்யப்பட்ட 75 ஊராட்சி ஒன்றியங்களில் திறம்பட செயல்படுத்துவதற்காக ரூ.7.35 கோடி (ரூபாய் ஏழு கோடியே முப்பத்தைந்து இலட்சங்கள் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வெளியிடுகிறது.

6. இந்த நிதியிலிருந்து பணம் பெற்று செலவிட வேளாண் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், அவர் செலவிடப்படும தொகைக்குத் தேவையான பட்டியல்களையும், கணக்குப் பதிவுகளையும் நிர்வகித்து கணக்கு தணிக்கையின்போது தவறாது சமர்ப்பிக்க வேண்டும்.

7. இத்திட்டத்திற்கான செலவு கீழக்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படல் வேண்டும்.

"2435 - Other Agricultural Programmes - 60 Others - 800 Other expenditure - Schemes in the Ninth Five Year Plan - II - State Plan - JC - Chief Minister's Tree growing schemes for the welfare of the people".

8. இத்திட்டம் ஒரு 'புதிய பணி' (New Service) திட்டமாக கருதப்படல் வேண்டும்.

9. இதற்குத் தேவையான செலவினத்தை 'எதிர்பாராச் செலவு நிதி' (Contingency Fund) யிலிருந்து மேற்கொள்ளப்படும். பின்னர் சட்டமன்றப் பேரவையின் இசைவு பெறப்படும்.

10, இச்செலவினம் மேற்கொள்ள உரிய நிதி வேண்டி தக்க கருத்துருவை நிதித்துறைக்கு (பிஜி.1) அனுப்புமாறு வேளாண் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

11. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகின்றது.
அ.சா.எண்.2508/FSP/97 நாள் 27.5.97.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா. ஆதிமூலம்

அரசு செயலாளர்.